இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 131 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 06 – ஞாயிற்றுக்கிழமை 21 டிசம்பர் 2025 – வெளியீர் 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 131: Thiruvalluvar Year - 2056 - Margazhi 06 - Sunday 21 December 2025 - Dak 36 Pages ₹ 5.00

## காணொலிக் காட்சி வாயிலாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று (21-12-2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :** வரைவு வாக்காளர் பட்டியல் - (Draft Electoral Rolls- SIR 2026) சரிபார்த்தல் குறித்து.

**‘அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018.
நாள்: 20-12-2025.

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# பேரிடர் நிவாரண நிதி : தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

சென்னை, டிச. 21 -

தமிழ்நாட்டிற்கு பேரிடர் நிவாரண நிதியாக 11 ஆயிரத்து 155 கோடி ரூபாய் கோரப்பட்ட நிலையில், வெறும் ஆயிரத்து 651 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது.

**பேரிடர் நிவாரண நிதி பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசு!**

பேரிடர் ஏற்படும் போது, ஒன்றிய அரசால் நிவாரண நிதி வழங்கப்படுவது வழக்கம். ஆனால், ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தபின் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண நிதியில் பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறது.

குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரண நிதி மிகவும் குறைவான அளவே வழங்கப்படுகிறது.

அதன்படி, தமிழ்நாட்டிற்காக பேரிடர் நிவாரண நிதியாக 11 ஆயிரத்து 155 கோடி ரூபாய் கோரப்பட்டது.

ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் ஆயிரத்து 651 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இது கோரப்பட்ட தொகையில் வெறும் 14 புள்ளி எட்டு ஒன்று சதவீதம் மட்டுமே ஆகும்.

இதுவே, பிறமாநிலங்களுக்கு அதிகப்படியான சதவீதத்தில் ஒன்றிய அரசு பேரிடர் நிவாரண நிதி வழங்கியுள்ளது. குறிப்பாக பா.ஜ.க. ஆளும் ஒடிசாவிற்கு 53 புள்ளி இரண்டு ஏழு சதவீத நிதியும், மத்திய பிரதேசத்திற்கு 31 புள்ளி 72 சதவீதம், குஜராத்திற்கு 30 புள்ளி இரண்டு ஐந்து சதவீதமும் பேரிடர் நிவாரண நிதி வழங்கியுள்ளது புள்ளி விபரம் மூலம் தெரிய வந்துள்ளது.

## தோஷாகானா ஊழல்:

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 17 ஆண்டுகள் சிறை!

கராச்சி, டிச. 21 -

தோஷாகானா ஊழல் தொடர்பான 2வது வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அவரது மனைவி புஷ்ரா பிபிக்கு பாக். நீதிமன்றம் தலா 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. பல்வேறு வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இம்ரான் கான் 2023ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் சிறையில் உள்ளார்

2021 மே மாதம் ஒரு அதிகாரப்பூர்வ பயணத்தின் போது சவூதி பட்டத்து இளவரசரால் இம்ரானுக்குப் பரிசளிக்கப்பட்ட விலையுயர்ந்த பல்கேரி நகைத் தொகுப்பை, மிகக் குறைந்த விலைக்கு விற்றது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது, சுமார் ரூ.80 மில்லியன் மதிப்புள்ள அந்த நகைத் தொகுப்பிற்கு வெறும் ரூ.2.9 மில்லியன் மட்டுமே செலுத்தி, பிடிஐ நிறுவனர் அதைத் தன்வசம் வைத்துக் கொண்டார் என்று அரசுத் தரப்பு வாதிட்டது.

இம்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராவல்பிண்டியில் உள்ள அதியலா சிறையில் நடைபெற்ற விசாரணையின் போது, சிறப்பு நீதிபதி ஷாருக் அர்ஜுமந்த் இந்தத் தீர்ப்பை வழங்கினார். இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கும் மொத்தம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருவருக்கும் தலா 16.4 மில்லியன் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. சட்டத்தின்படி, அபராதத்தைச் செலுத்தத் தவறினால், கூடுதல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

தீர்ப்புக்குப் பிறகு, இம்ரான் மற்றும் புஷ்ராவின் வழக்கறிஞர்கள் இந்த முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவிருப்பதாகத் தெரிவித்தனர்.

## வரைவு வாக்காளர் பட்டியல்:

# 3 இணையதளங்களில் சரி பார்க்கலாம்!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

டெல்லி, டிச. 21 -

வரைவு வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயர் உள்ளதா என்று 3 இணையதளங்களில் சரி பார்க்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. எஸ்.ஐ.ஆர். பணி மூலம் தமிழ்நாட்டில் 97.37 லட்சம் வாக்காளர்களை நீக்கப்பட்ட நிலையில் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. www.elections.tn.gov./SIR_2026.aspx இணையதளத்தில் தங்கள் பெயர் உள்ளதா என சரிபார்க்கலாம். voters.eci.gov.in/dowloaderoll என்ற இணையதளத்தில் தங்கள் பெயர் உள்ளதா என சரி பார்க்கலாம். electoralsearch.eci.gov.in என்ற இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து சரி பார்க்கலாம். erolls.tn.gov.in/asd/ என்ற இணையதளத்தில் எஸ்.ஐ.ஆர். பணி மூலம் நீக்கப்பட்டவர்களின் பெயர்களை அறியலாம் என தெரிவித்துள்ளது.

## கடும் பனிமூட்டம்:

# டெல்லியில் 63 விமானங்கள் ரத்து!

டெல்லி, டிச. 21 –

கடும் பனிமூட்டம் காரணமாக டெல்லியில் இருந்து புறப்பட வேண்டிய 63 விமானங்கள் நேற்று (20.12.2025 ) ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் டெல்லி விமான நிலையத்துக்கு வர வேண்டிய 66 விமானங்களும் திருப்பி விடப்பட்டதாக விமான நிலைய நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (19.12.2025) வருகை மற்றும் புறப்பாடு உட்பட 22 டெல்லி விமானங்களை இண்டிகோ ரத்து செய்தது. மொத்தம் 82 விமானங்கள் எந்த காரணமும் இல்லாமல் ரத்து செய்யப்பட்டன. குறைந்த தெரிவுநிலை மற்றும் மூடுபனி காரணமாக ராஞ்சி, ஜம்மு மற்றும் ஹிண்டனில் விமான அட்டவணைகள் பாதிக்கப்படக்கூடும் என்று விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அதிகாரிகள் கூறுகையில் ;

கடந்த சில நாட்களாக வட இந்தியாவில் பனிமூட்டம் தொடர்ந்து பார்வைத்திறனைக் குறைப்பதால் பெரும் விமானப் போக்குவரத்து இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) ஒட்டுமொத்த சூழ்நிலையையும் கண்காணித்து வருகிறது, பயணிகளின் வசதியை உறுதிசெய்து, விமான நிறுவனங்கள் சீராக செயல்பட உதவுவதாக தெரிவித்தனர்.

**காற்றின் தரம்:**

இதற்கிடையில், சனிக்கிழமை காலை டெல்லியின் காற்றின் தரம் மோசமடைந்தது, காலை 8 மணிக்கு ஒட்டுமொத்த காற்றின் தரக் குறியீடு (AQI) 384 ஆக இருந்தது, இது ‘மிகவும் மோசமான’ பிரிவில் இடம் பிடித்துள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) தெரிவித்துள்ளது.

